# ஆதியின் 'சைக்கிள்'



விருது பெறும் கவுன்சிலர்

வேலூர் மாவட்ட அ.தி.மு.க.விற்கு பொறுப்பாளராக இருக்கிறார் ஆதிராஜாராம். அ.தி.மு.க. மாநில இளைஞர் அணிச் செயலாளராகவும் இருக்கிறார். இவரிடம் வேலூர் மாவட்டப் பொருளாளரான சிவசங்கரன் சென்று, 'அண்ணே! அம்மா பிறந்த நாளுக்காக அன்னதான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கிறேன். நீங்கதான் வந்து துவங்கி வைக்கணும்' என்று கோரிக்கை வைத்திருக்கிறார். 'என்னால முடியாது' என்று தடாலடியாக, சொன்ன ஆதிராஜாராம், '50 பொட்டலத்தை வைத்து, 10 ரிப்போர்ட்டர்களை அழைத்து நிகழ்ச்சின்னு ஃபிலிம் காட்டி பந்தா பண்ணுற வேலையெல்லாம் வேண்டாம். நம்ம கட்சிக்காரங்க பல பேர் சைக்கிள்கூட இல்லாம இருக்காங்க! அப்படிப்பட்டவங்க ஒரு 117 பேரைக் (கூட்டுத் தொகை ஒன்பது) கூப்பிட்டு சைக்கிளும், பெண்களுக்குப் புடவையும் தர்றீங்களா சொல்லுங்க. உடனே வர்றேன்'என்று சொல்லியிருக்கிறார்.

வேறு வழியில்லாமல் சைக்கிள் தர ஒப்புக் கொண்ட ர.ர.க்கள், உடனடியாக 117 பேருக்கு சைக்கிளை வழங்க முடிவெடுத்தனர். விழாவுக்கு ஆதிராஜாராமையும் வரவழைத்தனர். இதைக் கேள்விப்பட்ட மற்ற ர.ர.க்கள், 'அண்ணே! எங்க ஏரியாவில் 25 பேருக்கு சைக்கிள் தர்றேன். 50 பேருக்கு சைக்கிள் தர்றேன்' என்று தினம் சைக்கிள் தரும் நிகழ்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். வேலூர் மாவட்டத்தில் ஆதிராஜாராமின் சைக்கிள் பிரச்சாரம்,'ரேஸ்' போல் வேகமாக கட்சி நிர்வாகிகள் மத்தியில் பரவிக் கொண்டிருக்கிறது.

## பழனிக்குப் போகும் மௌரியா!

தென்சென்னை போலீஸ் சரகத்தில் மயிலாப்பூர் டெபுடி போலீஸ் கமிஷனராக இருந்தார் மௌரியா! இவர் மீது முதல்வருக்கும் இஷ்டமில்லை; துணை முதல்வருக்கும் விருப்பமில்லை. ஆனால் முதல்வரின் இல்ல செல்வாக்கை வைத்துக் கொண்டு மயிலாப்பூரில் இருந்தார். பல சிவில் தகராறுகளில் இவரது பெயர் அடிபட ஆரம்பிக்கவும், அவ்வப்போது இவர் ஜாடை மாடையாக அறிவுறுத்தப்பட்டார். ஆனால் சமீபத்தில் திடீரென்று பழனி கமாண்டன்ட்டாகத் தூக்கியடிக்கப்பட்டுள்ளார். முதல்வரின் இல்லத்தில் உள்ள சரவணன் என்பவரின் நெருக்கம் இவரது பதவிக்கு உலை வைத்து விட்டதாக முதல்வர் வட்டாரத்தில் தகவல். அது மட்டுமின்றி 'முதல்வர் இல்லத்தில் இருக்கும் ஒரு உதவியாளருக்கு நள்ளிரவில் கார் அனுப்பு, டிஃபனுக்குப் பணம் கொடு' என்றெல்லாம் அந்தப் பகுதியில் உள்ள போலீஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு அடிக்கடி டார்ச்சராம்.

இது இப்படியிருக்க... தேனாம்பேட்டையில் உள்ள தி.மு.க. பெண்மணி ஒருவர், முதல்வருக்குப் புத்தாண்டு வாழ்த்து சொல்ல முன்பு போனாராம். அப்போதே அப்பெண்மணியைத் தடுத்தி நிறுத்தினாராம் மௌரியா. இது பற்றியும் முதல்வர் கருணாநிதியிடமே புகார் செய்திருக்கிறார் அந்தக் கட்சிக்கார பெண்மணி! இப்படி அடுக்கடுக்காக வந்த புகார்கள் ஒருபுறமிருக்க, சென்னை மாநகரப் போலீஸ் கமிஷனர்களாக வருவோரிடம் 'முதல்வர் இல்லத்திற்கு நெருக்கமானவன் நான் என்ற ரீதியில் மௌரியா நடந்து கொள்கிறார்' என்ற கோபம் அனைத்து கமிஷனர்களுக்கும் இருந்தது. எல்லாம் சேர்ந்து இப்போது அவரை பழனிக்கு மாற்றி விட்டது. இன்னும் சில மாதங்களில் டி.ஐ.ஜி.யாக பதவி உயர்வு பெற வேண்டிய நிலையில் இருக்கும் மௌரியாவை மாற்றியது, சிட்டி போலீஸ் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

## 'பாம் ரவி' மரணம்!

சினிமா பட ஷூட்டிங்குகளுக்கு 'டம்மி' குண்டு தயாரிக்கும் பாம் ரவி, வெடிகுண்டு விபத்தில் சிக்கி இறந்துவிட்டார். அவரது மனைவி சீரியஸான நிலையில் மருத்துவமனையில் இருக்கிறார். இவருக்கு ஏழாவது படிக்கும் ஒரே மகன்! சுமார் பத்து லட்சம் ரூபாய் அளவில் பணம் போட்டு ரொட்டேஷன் அடிப்படையில் இந்த டம்மி குண்டு பிசினஸைச் செய்து வந்தார் பாம் ரவி. சினிமாவில் இது போன்ற தொழிலில் இருப்பவர்களுக்கு இது ஒரு குடிசைத் தொழில் மாதிரி! முறைப்படி லைசென்ஸ் எடுத்து செய்ய வேண்டும் என்றால் குடோன் முதலில் வேண்டும். அப்படி குடோன் எடுக்கவே குறைந்தது ஐந்து லட்சம் ரூபாயாவது செலவாகுமாம். அதனால்தான் இப்படி 'டம்மி குண்டு' தயாரிப்பவர்கள் லைசென்ஸ் எடுப்பதில்லை. இதே மாதிரி இரு வருடங்களுக்கு முன்பு அதே பகுதியில் டம்மி குண்டு